செ.வெ.எண் : 31/மே நாள்:26.05.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**12-ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு விடைத்தாள் திருத்தும் மையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு.**

இராமநாதபுரம் மற்றும் பரமக்குடியில் 12-ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு விடைத்தாள் திருத்தும் மையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.05.2020) ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

நடப்பு கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி 27.05.2020 முதல் 09.06.2020 வரை நடைபெறவுள்ளது. இதற்காக இராமநாதபுரத்தில் சையது அம்மாள் மேல்நிலைப்பள்ளி முதன்மை விடைத்தாள் திருத்தும் மையமாகவும், சையது அம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கூடுதல் மையமாகவும், பரமக்குடியில் கே.ஜெ.இ.எம். மேல்நிலைப்பள்ளி முதன்மை விடைத்தாள் திருத்தும் மையமாகவும், ஆயிர வைசிய மேல்நிலைப்பள்ளி கூடுதல் மையமாகவும் என 4 மையங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மொத்தம் 928 ஆசிரியர்கள் விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடவுள்ளனர். 99,528 விடைத்தாள்கள் திருத்தப்படவுள்ளன.

அந்த வகையில், விடைத்தாள் திருத்தும் மையங்களில் ஒவ்வொரு அறைகளில் உள்ள மேஜைகள், பெஞ்ச்கள் உட்பட அனைத்து தளவாட சாமான்கள், மைய வளாகம் முழுமைக்கும் காலை, மாலை என இருமுறை கிருமி நாசினி தெளித்து சுத்தப்படுத்திட உள்ளாட்சித் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு அறையிலும் ஒரு முதன்மை மதிப்பீட்டாளர், கூர்ந்தாய்வு அலுவலர் மற்றும் 6 உதவி மதிப்பீட்டாளர்கள் என 8 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். ஆசிரியர்கள் போதிய சமூக இடைவெளி பின்பற்றி அமர குறைந்தபட்சம் 1.5 மீ இடைவெளியுடம் இருக்கைகள் அமைக்கப்படும். விடைத்தாள் திருத்தும் மைய வளாகத்தில் ஆசிரியர் தங்களது கைகளை சுத்தமாகக் கழுவி பராமரித்திட போதிய தண்ணீர் வசதியுடன் சோப்பு/கிருமி நாசினி இருப்பதை உறுதி செய்திட பள்ளிக்கல்வித் துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. வெளி மற்றும் உள் மாவட்டங்களிலிருந்து வருகை தந்து விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு 12 வழித்தடங்களில் சிறப்பு பேருந்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. விடைத்தாள் திருத்தும் மையத்தில் ஆசிரியர்களை தெர்மல் ஸ்கேனர் மூலம் உடல் வெப்பநிலை பரிசோதனை உள்ளிட்ட அடிப்படை பரிசோதனை மேற்கொள்ள 4 மருத்துவக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்டத்தில் இதுவரை 6,037 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 63 நபர்களுக்கு கொரோனா தொற்று உள்ளது எனவும், 5,937 நபர்களுக்கு தொற்று இல்லை எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. 37 நபர்களுக்கான பரிசோதனை முடிவுகள் வரவேண்டியுள்ளது. வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்றவர்களில் இதுவரை 30 பேர் பூரண குணமடைந்து அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் அ.புகழேந்தி, சுகாதாராத்துறை துணை இயக்குநர்கள் மரு.சி.அஜித்பிரபுகுமார், மரு.பி.இந்திரா, மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு.கோ.முத்துச்சாமி, திரு.சோ.கருணாநிதி, பரமக்குடி காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ஆர்.சங்கர், நகராட்சி ஆணையாளர்கள் திரு.என்.விஸ்வநாதன், திரு.வீரமுத்துக்குமார், பரமக்குடி வட்டாட்சியர் திரு.செந்தில்வேல்முருகன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**